# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 06.11.2020 ((முற்பகல்)**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••••••

**வழக்கு எண்.SA 4223/E/2020**

திரு.பொ.ரெடிஒன் ... மேல்முறையீட்டாளர்

/ எதிர் /

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திண்டுக்கல் கிழக்கு வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | ------ |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 19.03.2019 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 19.05.2020 |

******

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்ட நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாததால் இன்று (06.11.2020) முற்பகலில் தொலைபேசி மூலம் தொடர்புக் கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மேல்முறையீட்டாளர் திரு.பொ.ரெடிஒன் அவர்கள் தனது சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான மனுவில் கைபேசி எண்ணை குறிப்பிடாததால்,

இவ்வாணையத்தால் அவரை தொலைபேசி மூலம் தொடர்புக் கொள்ள இயலவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி.தமிழ்செல்வி, பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், திண்டுக்கல் கிழக்கு வட்டம், திண்டுக்கல் மாவட்டம் அவர்கள் மட்டும் இன்றைய விசாரணையில் பங்கேற்றார்.

2. மேல்முறையீட்டாளர் தேதியிடப்படாத தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் திண்டுக்கல் வட்டம், கிழக்கு தாலுக்கா, A.வெள்ளோடு கிராமம் சர்வே எண்.421/14 பட்டா எண்.1669ன் நிலத்திற்கு ஆட்சேபனை மனு எண்.2/11 ஒ.மு.எண்.25316/2011/ஆ2 ல் உள்ள கடிதத்தின் அலுவலக குறிப்பாணையில் A.வெள்ளோடு கிராம நிர்வாக அலுவலர் அவர்களுக்கு மேற்படி நிலம் சம்பந்தமாக தளபார்வை செய்து அறிக்கை விபரம் வழங்கக்கோரியும், மேற்படி அலுவலக குறிப்பாணைப்படி A.வெள்ளோடு கிராமம் நிர்வாக அலுவலர் அவர்கள் கொடுத்த அறிக்கையின் விபரம், மேற்படி நிலத்தின் தளபார்வையின் நடவடிக்கையின் குறிப்பும் மற்றும் மேற்படி கடிதத்தின் நடவடிக்கையின் விபரம் சான்றொப்பமிட்டு வழங்கக்கோரியும் உள்ளிட்ட 2 இனங்களில் தகவல்களைக் கோரி, பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், தாலுக்கா அலுவலகம், திண்டுக்கல் மாவட்டம் என விலாசமிட்டு தாக்கல் செய்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளருக்கு 05.02.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாகப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படாததால் மேல்முறையீட்டாளர் 19.03.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர் / திண்டுக்கல் மேற்கு வட்டாட்சியர், திண்டுக்கல் மேற்கு வட்டாட்சியர் அலுவலகம், திண்டுக்கல் மாவட்டம் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளருக்கு 30.04.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக மேல்முறையீட்டு அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. அதன்பிறகும் பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படாததால் பொது அதிகார அமைப்பினரால் தனக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்க உத்திரவிடுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 19.05.2020 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (06.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இதுகுறித்து இன்றைய விசாரணையில் தொலைபேசியின் வாயிலாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலரிடம் வினவியபோது, மேல்முறையீட்டாளர் கோரியுள்ள தகவலை 15 தினங்களுக்குள் வழங்குவதாக தொலைபேசி வாயிலாக வாக்குமூலமாகத் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலரின் வாதுரையை ஆணையம் பதிவு செய்து, விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

1. **மேல்முறையீட்டாளர் தேதியிடப்படாத தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரிய திண்டுக்கல் வட்டம், கிழக்கு தாலுக்கா, A.வெள்ளோடு கிராமம் சர்வே எண்.421/14 பட்டா எண்.1669ன் நிலத்திற்கு ஆட்சேபனை மனு எண்.2/11 ஒ.மு.எண்.25316/2011/ஆ2 ல் உள்ள கடிதத்தின் அலுவலக குறிப்பாணையில் A.வெள்ளோடு கிராம நிர்வாக அலுவலர் அவர்களுக்கு மேற்படி நிலம் சம்பந்தமாக தளபார்வை செய்த அறிக்கை விபரம் தொடர்புடைய தகவலை முறையாக மற்றும்**

**முழுமையாக சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை அறிக்கையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலர் அவர்களுக்கு உத்திரவிடப்படுகின்றது.**

2. **மேல்முறையீட்டாளர் தேதியிடப்படாத தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரிய தகவல் தங்களது அலுவலகத்திலோ அல்லது தொடர்புடைய இதர அலுவலகங்களிலோ இல்லையென்றால் அதுகுறித்து பிரமாண வாக்குப்பத்திரம் (Sworn Affidavit) ஒன்றை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்படுகின்றது.**

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப்பதிவாளர்.**

**<u>வழக்கு எண்.SA 4223/E/2020</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திண்டுக்கல் கிழக்கு வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்.

**<u>மனுதாரர்</u>**

திரு.பொ.ரெடிஒன்,
த/பெ.T.பொன்னுச்சாமி,
சிலுக்குவார்பட்டி அஞ்சல்,
நிலக்கோட்டை தாலுக்கா,
திண்டுக்கல் மாவட்டம் - 624 215.

Copy to: Judgement File.
*"VP / PA -10.11.2020"*